[redacted]

[redacted]ங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

[redacted]நத திராவிட சுவக்கியான பத்திரிகை.

VII.—No. 4.] MADRAS:—SUNDAY JANUARY 22, 288. A. S. [Monthly, 4 Annas.

சோல்லுகசோல்லைப்பிறிதோர்சோலச்சோல்லே
வெல்லுஞ்சோலின்மையறிந்து.—குறள்.

மிஸ்டர் ராம் சந்தர் போஸும் இவொலியூஷன்சித்தாந்தமும். | கடிதம.
இந்துசோதிடம். | சில்லரை.

பொங்கல் வேடிக்கை.

மாட்டுப்பொங்கல்தினம் சாயங்காலம் சாலைவீதியாய் மெர
ண்டு ஓடிவந்த எருமைமாடுகளில் முந்திவநத வொன்று ஒரு
சந்தின் ஓரமாய்த்திரும்பினவுடனே அந்தப்பக்கமாய்ச் சென்
றவர்கள் ஒதுங்க இடமில்லாமல் தத்தளிக்கையில், எதிர்ப்பட்
டவொரு கிழவியைக் கீழே தள்ளிவிட்டு ஓடியும் ஓடாததற்கு
முன்னமே, கும்பு கும்பாய்ப் பின்னால் திரண்டோடிவந்த எரு
மைகளை அதட்டி யொதுக்குவதற்கே கஷ்டமாய்விட்டதினால்
விழுந்த கிழவியை எடுப்பதற்குச் சாவகாசமில்லாமறபோயிற்
று. கிழவி சொற்பகாயத்தோடு தப்பித்துக்கொண்டனள்.
பட்டணத்திற்குள் மாடு மெரட்டலால் மற்ற பாகங்களில் என்
னென்ன தீங்கு விளைந்திருக்குமோ!

நமது இந்துதேசத்து "நாஷனல்கான்கிரெஸ்" என்னும்
நாட்டாண்மை கூட்டத்தார் பார்லிமெண்டுமகாசபையிலே இந்
துக்களுக்கு மெம்பர்களாயிருக்கும்படியான சிறப்பையும், சே
னையிலே கர்னல்—ஜனரல் கமாண்டரின்சீவ் என்னும் தலைமை
யான ஹோதாக்களையும், சம்பாதித்துக்கொடுக்க முயலுவதற்
குமுந்தி, நமக்குளிருக்கிற துர்வழக்கங்களைத் தொலைக்கும்படி
யான முயற்சி செய்வார்களாகில் உத்தமம்.

விசேஷ அறிக்கை.

அடிக்கடி கேட்டுக்கொண்டு ஞாபகப்படுத்தியும், நமது கை
யொப்ப நேயர்களில் சிலர் மூன்றுமாச ஆறுமாச பாக்கியை நி
றுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் முன்பணஞ்செலு
த்தாமல் ஒருமாசம் தவக்கப்படுத்துகிற கையொப்பக்காரர்கள்
பாக்கி செலுத்தாதிருக்கிற வரையில் அவர்களுக்குப்பத்திரிகை
அனுப்பாதிருக்கும்படி மனவருத்தத்துடனே தீர்மானஞ் செய்
யவேண்டியவர்களாயினோம்.

மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றும்பொருட்டு ஏறக்கு
றைய ஐம்பது கையொப்பக்காரர்களின் பெயரை அடித்துப்
போடவேண்டியதாயிருக்கிறது. ஆதலால், சோசைட்டியார்
தங்கள் உபயோகமான வேலையை நடத்திவருவதற்குச் சாத்தி
யமாயிருக்கும்படி, அடிபட்டுப்போகும் கையொப்பக்காரர்க
ளுக்குப் பிரதியாகப் புதுகையொப்பக்காரர்களைச் சம்பாதிக்
கும்படியானபிரயாசையை நமது நண்பர்களுக்கும் பத்திரிகா
நேயர்களுக்கும் மறுபடி கொடுக்கவேண்டியவர்களாயிருக்கி
றோம்.

மிஸ்டர் ராம் சந்தர் போஸும் இவொலியூஷன் சித்தாந்தமும்.

லக்னோவிலிருந்து நாஷனல்கான்கிரெஸுக்குப் பிரதி நிதிக
ளாகவந்தவர்களில் ஒருவராகிய ரிவரெண்டுராம் சந்தர் போஸ்,
M. A., அவர்களால்செய்யப்பட்ட உபந்நியாசத்தின் தோர
ணியிலே, அந்த உபந்நியாசகர் இவொலியூஷன் சித்தாந்தத்
தைக் குறித்துச் சில விசேஷங்களைக்குறிப்பித்தனர்; அவை
திருத்தப்படத்தக்கவை. மனிதன் குரங்கின்வமிசமென்று சா
ஸ்திரங்கூறுவதாக அவர் ஜனங்களுக்குத் தெரிவித்தனர். இது
உள்ள சங்கதியைச் சரியாய்த் தெரிவித்ததல்ல. ஒரு குரங்கி
னிடத்திலிருந்து மனிதன் ஜனித்தானென்று எந்த சாஸ்திரியு
ஞ்சொல்லியிருக்கவில்லை. ஆயினும், மனிதனுங் குரங்குமாகிய
இரண்டும் பொதுவாகிய ஒரு மூதாதையின் சந்ததிகளென்பது
தான் உண்மை. இது வெறும்வாய்ச் சொல்லல்ல, அதற்கு
ருஜுவாகச் சகலமுமிருக்கின்றன. இந்த ருஜுக்களில் நான்
இப்போது நுழைய எத்தனப்படவில்லை. மனிதனுடைய சரீ
ரக்கூறு தத்துவசாஸ்திரத்திலாவது அங்கஜீவசாஸ்திரத்திலாவ
து மனிதனுக்கும் அவனுக்குச் சம்பந்தப்பட்ட தாழ்ந்த பிரா
ணிகளுக்கும் ஒருவிஷயத்திலாவது வேற்றுமையில்லை. மனி
தோற்பத்தியைக்குறித்து சாஸ்திரசம்மதமான விசாரணையி
லே, ஒரே வமிசத்தைப் பிடித்துக்கொண்டு யோசிக்கவுங்கூடா
து, சகலத்தையும் விட்டுவிட்டு, உயர்ந்த வமிசங்களைப் பிடித்
துக்கொண்டு யோசிக்கவுங்கூடாது. சாதாரணமானவன் ம
னிதோற்பத்தியைக்குறித்து விசாரணைபண்ண நினைக்கையில்,
நாகரீகமடைந்த ஐரோப்பியனையாவது இந்துவையாவது அம
ரிக்கனையாவது எப்போதும்மனதில்நினைத்துக்கொள்ளுகிறான்.
இவொலியூஷனால் மாறிமாறிப் பூர்த்திக்கு வந்த மனிதனைக்
குரங்குக்கும் மற்றத் தாழ்ந்த மிருகங்களுக்கும் ஒப்பிடப்பார்
க்கிறான். மிஸ்டர் போஸினுடைய வாதத்திலுண்டாயிருக்கி
ற ஆபாசம் இதுதான். மிஸ்டர் போஸ் என்பவர் ஒப்பிட்டது
போல, கல்விப்பயிற்சியினாலே ஞானத்தில் சிறந்த வமிசத்
தின் விவேகத்தன்மையைத் தாழ்ந்த மிருகங்களுக்குச் சாதா
ரணமாயிருக்கிற இயற்கையான குணத்தோடு ஒப்பிட்டுப்பார்
ப்பது வியர்த்தம். மற்றப்படி செய்யவேண்டியதென்னவென்றா
ல், மானிடவம்சங்களிலே மிகவுந்தாழ்ந்த வமிசத்தையும் மிரு
கவர்க்கங்களிலே மிகவும் உயர்ந்தவர்க்கத்தையும் ஒப்பிட்டுப்
பார்க்கவேண்டியதுதான். காட்டுமனிதனாகிய பிஜியனுக்கும்
குரங்குக்குமிருக்கிற வித்தியாசத்தைப்பார்க்கினும், அந்த கா
ட்டுமனிதனுக்கும் கல்வியிற்சிறந்த யூரோப்பியன் அல்லது இந்
துவுக்கும் அதிக வித்தியாசமுண்டு. "தன் சத்துருக்களை வதை
க்கப்பிரியங்கொள்ளுகிறவனும், ரத்தபலிகொடுக்கிறவனும், இர
க்கமில்லாமல் சிசுவதைசெய்கிறவனும், தன்மனைவிகளை அடிமை
களாகநடத்துகிறவனும், நாணமின்னதென்று அறியாதவனும், சு
த்தமூடபக்தியில்மூழ்கியிருப்பவனுமாகிய மூர்க்கனுடையவம்
சத்தானுயிருப்பதைப்பார்க்கினும்—தன் எஜமானுடையபிராண
னைக்காப்பாற்றும்பொருட்டுத்தனது பயங்கரமானசத்துருக்க
ளைதீரத்தோடு எதிர்த்த அந்தச்சவுரியமுள்ளசிறுகுரங்கின் வம்
சத்தானாகவாவது, மலைகளிலிருந் திறங்கிவந்து, தனது சிறு
சிநேகிதனை உக்கிரமான நாய்களின் கூட்டத்திலிருந்து வெற்
றியுடனே கொண்டுபோய்விட்ட அந்தக் கிழக்குரங்கின்வம்சத்
தானாகவாவதிருக்கிற" டார்வினோடு என்மட்டில் சேர்ந்திருக்க
யானஇஷ்டங்கொண்டவனே. விம்வகத்திலே மனிதன் அளவில்
வித்தியாசப்படுகிறானேயன்றி, தன்மையில்வித்தியாசப்படவில்
லை; கிட்டத்தட்டமானிடமன தினவியாபாரம்யாவும்தாழ்ந்தமிரு
கங்களின் மனதில் காணப்படுகின்றன. கடைசியாய் மிஸ்ட
ர் போஸானவர் சாஸ்திர சித்தாந்தத்தை அவலட்சணமானதெ
ன்று பரிகாசஞ் செய்கிறார். ஆயினும், அவர் கிரகித்தது அவ்
வளவுதான். பரிகாசம் பண்ணுவதினாலேமாத்திரம் யாவரை
யுமொப்பச் செய்து, அந்தச் சித்தாந்தத்தை அடித்துப்போட
எண்ணங்கொண்டு பாடுபடுகிறவராகக் காணுகிறார். அந்தச்
சித்தாந்தமோ, மிஸ்டர் போஸுக்கு முன்னிருந்தவர்கள் செய்
த சகல எதிர்ப்புகளுக்கு மீறிக் கொண்டாட்டத்துடனே ஜீவி
த்திருக்கிறது; "தி ஆரிஜன் ஆவ் ஸ்பிஷீஸ்" என்னும் செடிவர்
க்க ஜீவராசி உற்பத்திகிரந்தமாகிய அந்த அழிவில்லாத சாஸ்
திரம் பிரசுரமானதுமுதற்கொண்டு அந்தச் சித்தாந்தம் ஊடுரு
விச் செல்லவேண்டியிருந்த எதிரிகளின் பாணங்களுக்குப் பரி
காசம் வரவுசெலவல்ல. இவொலியூஷன் சித்தாந்தம்போன்
ற ஊர்ஜிதமான கருத்தைப்பற்றிச் செய்கிற வெறும் பரிகாச
மானது பரிகாசஞ் செய்கிறவர்கள்பேரில் இரட்டிப்பாகமாத்
திரந்தான் திரும்பும். சிறந்தோர் பலரும் தங்களுடைய மிகு
ந்த கவனத்தைச் செலுத்துகிற இவொலியூஷன் சித்தாந்தமா
னது இருபத்தைந்து வருஷத்திற்கதிகமாகவே ஜனங்கள் செய்
த சர்ச்சைக்குப் பின்வாங்காமல் நிலைநின்றிருக்கிறது. இந்தச்
சித்தாந்தமானது முன்னமேயொன்றுந் தெரியாதிருந்த மிருகதத்
துவ சாஸ்திரத்தினாலும் செடிவர்க்க சாத்திரத்தினாலும் வெ

ளியாகிற சங்கதிகளைத் தினந்தோறும் விளங்கச்செய்துவருகிறது. ஜீவதத்துவசாஸ்திரத்தில் பொருத்தமான அபிப்பிராயமுடைய எந்தச் சாஸ்திரியும் இவொலியூஷன் சித்தாந்தியாயிராமற்போவதில்லை. இவொலியூஷன சித்தாந்தமானது வெறுமையான அபிப்பிராயமாயிராமல், இப்போது அங்கீகரிக்கப்பட்ட உண்மை நிலைக்கு வந்திருக்கிறது. தன்பட்சத்திலிருக்கிறவர்களுக்குள்ளே, ஸ்பென்சர், ஹக்சிலி, ஹாக்கேல், லான்கிஷ்டர் முதலான (இங்கே பேர் குறிப்பதற்கு இடம் போதாது) அநேக சமர்த்தர்களாகிய மகா சிறந்த புத்திமான்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிற சித்தாந்தமானது நிச்சயமாகவே இழிவான சித்தாந்தமாயிருக்கமாட்டாது. மிஸ்டர் போசானவர் மனிதன் குரங்கினது வம்சமென்று அந்த சித்தாந்தம் கூறுகிறபடியால், மனிதன் குரங்கைப்போலப் பிரவர்த்திக்கவேண்டுமென்று சபையாருக்குச் சொல்லி, அந்த சித்தாந்தத்தை இழிவானதென்று ரூபிக்க முயன்றனர். இந்த அறப ஒப்புவமையினாலேயே அந்த வாதத்தின் ஆபாசம் வெளியாகிறது. மனிதன் ஓர்காலத்தில் குழந்தையாயிருந்ததினாலே அவன் குழந்தையைப்போலவே பிரவர்த்திக்கவேண்டுமென்பதும் ஒரு நியாயந்தானோ?

தன் சபையாருக்குச் சுருக்கென்று தைக்கும்படியாக, மிஸ்டர் போசானவர்—மனிதனுடைய உற்பத்தியைக்குறித்த சாஸ்திர சித்தாந்தமானது தாழ்ந்த பிராணிகளிலிருந்து மனிதன் உற்பத்தியானதாக நம்பும்படிச் சொல்லுகிறபடியால் மிகவும் ஈனமாயிருக்கிறதென்று குறித்திருக்கின்றனர். சரியான திருஷ்டிவைத்துப் பார்ப்போமாகில்,மனிதன்வரவர உள்ளுக்கிறங்கிப்போகாமல் படிப்படியாய் உயருகிறவனாயிருக்கிறானென்று அந்தச் சித்தாந்தத்தினால் தெரியவருகிறபடியால் அது மிகவும் திருப்தியும் கம்பீரமுமுள்ளதாயிருக்கிறது. அந்தவிஷயத்தில் டார்வினவர்களே சொல்லியிருப்பதைச் சற்று கவனிப்போம்:—"தனது முயற்சியாலல்லாவிட்டாலும், அங்கக்கட்டுவிஷயத்தில் மிகவும் உன்னதத்திற்கு உயர்ந்ததைக்குறித்து மனிதன் கொஞ்சம் மமதைகொள்வானாகில் கொள்ளவேண்டியதுதான், இவ்விதமாய் மனிதன் உயர்ந்துவந்த சங்கதியினாலே, உற்பத்தியான நிலையிலேதானே நின்றுவிடாமல், முன்னுக்கு இன்னும் உயரும்படியானகோரிக்கை அவனுக்குண்டாகலாம்" என்று கூறியிருக்கின்றனர். இவொலியூஷன் சித்தாந்தத்தை அநுசரிப்பவர்களும் அதை விளங்கக்காட்டுகிற மகாபுருஷர்களும் கொண்டிருக்கிற கொள்கையின் முடிவானது உண்பதும் குடிப்பதும் சாவதுமேயென்று மிஸ்டர் போஸ் குறித்திருக்கிறார். இந்தச் சித்தாந்தத்திலிருந்து அவர் கிரகித்த சாரத்தை ரூபிக்கும்படி அவரைக் கேளாமலே, அவர் நினைத்திருக்கிறபடி உலகத்தின்கண் பிரவர்த்திக்கிற ஒரு இவொலியூஷன் சித்தாந்தியின் பெயரையாவது அவர் குறிக்கவல்லராவென்று துணிந்து கேட்கிறேன். அவர் சொல்லுகிறபடிக்கல்லாமல், பிரபஞ்சத்தினது ஞானசொரூபத்தை அறிவதும், அதனுடைய தருமங்களின் கியானத்தின்மேல் அதிக லட்சியம் வைத்திருப்பதுமே இவொலியூஷன் சித்தாந்தி அநுபவிக்கிற பேரானந்தம். மிஸ்டர்போஸ் என்பவர் கூறிய மற்றப்பிசகுகளுள் "survival of the fittest" (தகுந்தவற்றுள மீறுபவை) என்னும் பதத்திற்கு தப்பர்த்தஞ் செய்ததொன்று. உற்பத்தி சித்தாந்த சம்பந்தமாய் இந்தச் சந்தோஷகரமான பதத்தை ஏற்படுத்தின ஹர்பெர்ட் ஸ்பென்சரானவர் மிஸ்டர் போஸ் என்பவரைப்போன்ற புத்திமான் இப்படிப்பட்ட ஆபாசத்தைக் கூறுவதைக் கேட்பாராகில் சிரிக்கவேசிரிப்பர். மனிதனுக்குளிருக்கிற பலமான கருவிகள் அவனுடைய தேக இச்சைகள்தானென்றும், ஆகையால் அவைகள்தான் மீறுவதற்குத் தகுந்தவையென்றும் மிஸ்டர்போஸ் கூறினர். உண்மையான சங்கதிகளைத் தெரிந்துகொள்ளாமையால், அந்தச் சித்தாந்தத்தினால் நேராயுண்டாகிற பிரயோசனம தேக இச்சைகளை மீறச்செய்வதாயிருப்பது பற்றி அதனிடத்தில் நம்பிக்கைவைப்பது கூடாவொழுக்கமென்று முடிவுகட்டினர். ஆனால், தேக இச்சைகள்தானா மனிதனுக்குள் பலமான கருவிகளாயிருக்கின்றன? என்கிற கேள்வி சகஜமாயுண்டாகிறது. அதிகமாய் உண்ணவாவது குடிக்கவாவது இச்சையுண்டாகும்போது, அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டாமென்று நமக்குச் சொல்லுகிறதெது? அப்படிப்பட்ட இச்சைகளுக்குள்ளாவதினின்றும் மனிதனை நிவர்த்திசெய்ய அவனுடைய மனதில் முயற்சிசெய்கிற அறிவாகாரமான சக்தியிருக்கவில்லையா? சகாப்த சகாப்தமாய் அநேக சகாப்தங்கள் கழிந்த பின்பும், அதிக அநுபவத்தினாலும், மானச அறிவாகாரவுணர்ச்சிகள் மானிட சாதிக்குப் பிரயோசனகரமானவையாகக் கண்டறியப்பட்டன. ஆதலால் "நிலைத்திருப்பதற்கான போராட்டத்தில்" மீறி நிற்கும்படியானவை இவைகளாகலாம்.

சாஸ்திரம்,

---

43. [illegible]
சாயல், நிற[illegible]
ம், அங்கப்பழு[illegible]
இப்படிப்பட்ட ச[illegible]
வதாக சோதிடம் நடி[illegible]றது. ஜன[illegible]
திலுள்ள கிரகநிலைகளைக்கொண்டு அப்படிப்பட்ட[illegible]
சியம் சொல்லப்படுகிறது. ஜனனத்திற்கு முந்[illegible]
கிரகங்கள் அந்த ஸ்தானங்களுக்கு வருவதற்குமுந்[illegible]
ம் கர்ப்பத்திலே அப்படிப்பட்ட சரீரவேற்றுமைகள் யாவுமாவது பலவாவது ஏற்படுகின்றன வென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். கிரகங்கள் பின்னோக்கியும் பிரவர்த்திக்கக்கூடுமோ? மேலும், ஒருவன் துஷ்டத்தனமுள்ள ஒரு புதுகுதிரையின்மேல்சவாரிபோய், சாய்ந்து முன்னுக்கு வந்திருக்கிற ஒரு மரக்கிளையில் தலைமோதி, உடனே யிறந்துபோனான். ஜனனகாலத்திலிருந்த கிரகங்கள் அந்த மனிதனை புதுகுதிரை வாங்கும்படிக்கும், குதிரையை துஷ்டத்தனஞ் செய்யும்படிக்கும், கிளையைப் பிதுங்கிவரும்படிக்கும், இவ்விதமாய் அவனைச் சாகும்படிக்கும், இப்படிக்கெல்லாஞ் செய்வித்ததென்று நினைக்கக்கூடுமா?

மேலும், ஒருவனுக்கு மனைவி யிறந்துபோகிறாள், காலத்திற்கு முந்தின பிரசவத்தினாலும், பழக்கமில்லாத மூடமருத்துவச்சி மருத்துவம் பார்த்ததினாலும், அந்த மரணமுண்டாயது. புருஷனுடைய ஜனனகாலத்திருந்த கிரகங்கள் காலத்திற்குமுந்திப் பிரசவிக்கும்படிக்கும், அப்படிப்பட்ட மருத்துவச்சி வரும்படிக்கும், அவள் தாறுமாறாய் மருத்துவம் பார்க்கும்படிக்கும், இப்படிக்கெல்லாஞ் செய்வித்ததென்று நினைக்கக்கூடுமா?

44. சோதிடத்திற்கு நாசகரமான வேறொரு வாதம்.

சோதிட நிபந்தனைகள் அபத்தமானதால், சிலசமயங்களில் நம்மை ஆபாசத்தில் கொண்டுபோய்விடுகிறது. த—என்கிற ஒருவன்30வயதிலே தாரமிழப்பானென்று ஜோசியம்சொல்லப்படுகிறது.ஆனால்அவனுடையமனைவியாகிய ந-என்பவளது ஜனனகாலத்திருந்த கிரகங்களினால் அவளுக்கு ஆயுசு அறுபதுவருஷமென்று தெரியவருகிறது. ந—என்பவளுடைய ஜன்னகாலத்திருந்த கிரகங்களினாலே முப்பது வயதிலே அவள் விதந்து ஆவாளென்று தெரியவருகிறது. அவளுடைய கணவனாகிய த-என்பவனது ஜனனகாலத்திருந்த கிரகங்களினாலே அவனுக்கு ஆயுசு அறுபதுவருஷமென்று தெரியவருகிறது. கணவனுடைய ஜாதகத்தினால் அவனுக்குச் சந்தானமுண்டாகுமென்று தெரியவருகிறது. மனைவியினுடைய ஜாதகத்தினால் அவளுக்குச் சந்தானமுண்டாகாதென்று தெரியவருகிறது. இவ்வித திருஷ்டாந்தங்கள் அனேகமறிந்திருக்கிறேன்; அவை பாவித்துக்கொண்டவையல்ல.

45. சோதிடம் பொய்யென்பதற்கு சுலபமானருஜு.

அடியில் கண்டிருக்கிற சோதிடர்கள் அறியாதவனாய், நீர்மாத்திரம் அறிந்திருக்கிற ஒருவனுடைய ஜாதகத்தை எடுத்துக்கொள்ளும். அதற்கு ஒரு பிரதியை ஒரு சோதிடனிடத்தில் கொடுத்து, முந்தி நடந்திருப்பதைச் சொல்லச்சொல்லி கேளும். மற்றொரு பிரதியை வேறொரு சோதிடனிடத்தில் கொடுத்து அவனையும் அவ்வாறேகேளும். அவ்விரண்டு சோதிடர்களும் ஒருவரையொருவர் அறியாமல் சொல்லும்படி சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும். சோதிடம் உண்மையானால், அவ்விருவர் சொல்லும் கிட்டத்தட்டவொத்திருக்கவேண்டுமே. இந்தப் பரிசோதனைக்குப் பிரயாசையும் பணச்செலவும் வெகுசொற்பந்தான்; எவனுடைய வாழ்க்கையைக்குறித்துச் சொல்லப்படுகிறதோ அந்த நபர் ஒருவனேயாகவும் கிரகநிலைகளும் ஒன்றேயாகவுமிருந்தும், உண்மையான சங்கதி உமக்

...ரிந்திருப்பதால், அவ்விருவர் சொல்வதும் வெ
...தியாசப்பட்டு, அவ்வுண்மைக்கு ஒத்திருக்கவி
...யன்று வெகுவாய்க்காணுவீர். நீர் பரிசோதனை
...அடியில் கண்டிருக்கிறவிதமாய் ருஜூபார்க்கலாம்.
...ஈரொருவயதில் இறந்துபோனதாகவுமக்குத் தெ
...ருக்கிற ஒருவனுடைய ஜாதகத்தினபிரதிகளைப்பல
...ாதிடர்களிடத்தில கொடுத்து, அவனுடைய ஆயுசு
...வ்வளவென்று கேளும். அவர்கள் சொல்லுவது உ
...ாமைக்கு ஒத்திருக்கிறதாபாரும். சூதுவாதில்லாமல்
...செய்கிற இப்படிப்பட்ட சில சொற்ப பரிசோதனைகளா
ல் சோதிடம் உண்மையானதும் பொய்யானதும் முடி
வாய்விடும்.

பற்பல யூனிவர்சிட்டிகளைச் சேர்ந்து பட்டம்பெற்
றும் பெருமலுமிருப்பவர்கள் தங்கள் தேசத்துக் கோ
டானுகோடி ஜனங்களின் பிரயோசனத்துக்காகப் பரி
சோதனை செய்வதற்குவேண்டிய சொற்பப் பிரயாசை
யெடுத்துக்கொள்ளச் சோம்புவார்களா, பால்மாறிக்கை
கொள்ளுவார்களா ? கொள்ளார்களென்று கோருகி
றேன்.

46. சோதிடத்திலுள்ள அனேக விதிகள்
சரிபார்ப்பதற்கு அசாத்தியமானவை.

சோதிடத்திலுள்ள அனேகவிதிகள் செய்யப்பட்டி
ருக்கிற விதம் அனுபவத்தினலாவது கவனிப்பினலா
வது சரிபார்ப்பதற்கு அசாத்தியமாயிருக்கிறது. திரு
ஷ்டாந்தமாக அடியில் வரும் விதிகளை எடுத்துக்கொ
ள்ளுவோம்.

"6. மேல்நோக்கும் ராசியானது விடபாசியாயிருந்து, அ
தில் சந்திரன் குடிபுகுந்திருந்தாலும், சூரியன் சிங்கவிராசியி
லும், பிரகஸ்பதி விருச்சிகவிராசியிலும், சனி கும்பவிராசியி
லும் குடிபுகுந்திருந்தாலும், அக்காலத்தில் பிறக்கிறவன் ராஜ
னுவான்.

"7. மேலும், மேல்நோக்கும் ராசி கன்னிராசியாயிருந்து,
அதில் புதன் தங்கியிருந்தாலும், அங்காரகனும் சனியும் ஐந்தா
ம்வீட்டில் தங்கியிருந்தாலும், சந்திரனும் பிரகஸ்பதியும் சுக்கி
ரனும் நாலாம்வீட்டில் தங்கியிருந்தாலும், அக்காலத்தில் பிற
ந்தவன் ராஜனுவான்." வராஹ மிஹிர என்பவரால் செய்யப்
பட்ட பிரீஹத் ஜடக என்னும் கிரந்தத்திற்கு ந். சிதம்பரம்
ஐயர், B. A. F. T. S. அவர்களால் செய்யப்பட்ட இங்கிலீ
ஷ் மொழிபெயர்ப்பு, அத்தியாயம். XI.

மேற்படி விதிகளை சரிபார்ப்பதற்கு ஒருவனுடைய
ஆயுசு காலம்போதாது, அனேக தலைமுறைகளும் போ
துமானவையல்ல.

47. சோதிடம் சரியாய் உண்மையல்லாதிருக்கச்சே,
கிட்டத்தட்டவாவது உண்மையானதல்ல.

யான் கலந்து சர்ச்சைசெய்த சோதிடர்களில் ஒரு
வராவது ஜாதகர்களில் அநேகருக்கு இன்னகிரகநிலை
யினலே இன்ன துண்டாயிற்றென்கிற இப்படிப்பட்ட
சாதாரணமான யாதொரு உள்ள சங்கதியைச் சொல்
லக்கூடியவராயில்லை ; கிட்டத்தட்டவாவது உண்மை
யான சங்கதியைச் சொன்னரில்லை. ஆதலால், சொல்
லப்படுகிற ஜோசியம் நிச்சயமற்றதாயிருப்பதுமன்றி,
ஒரு பரியாயமானதாகவுமில்லையென்று முடிவாகிறது.
வாழ்க்கையில் அனுபவமான காரியங்களுக்கு அது நம்
பப்படத்தக்கதல்ல.

48. சோதிடம் பொய்யெனல்.

வானசாஸ்திரமானது நிர்ணயமான தருமத்தின்படிக்
கு வானவுருக்கள் கமனஞ்செய்கிறதென்கிற உண்மை
யான கொள்கையின்பேரில் ஆதாரப்பட்டிருக்க ; சோ
திடமானது நிர்ணயமான தருமத்தின்படிக்கு அந்தவுரு
க்கள் மானிடர்களின் பொருள் சம்பந்தமும் குணகுண
சம்பந்தமுமான பலன்களை விதிக்கிறதென்கிற பொய்
யான கொள்கையின்பேரில் ஆதாரப்பட்டிருக்கிறது.
இந்த வித்தியாசத்தை மனதில் நன்றாய் வைக்கவேண்
டியது முக்கியம். முந்திய மூலாதாரமான கொள்கை
யின் உண்மையைக்குறித்து விஸ்தாரம் ருஜூக்களிருக்
கின்றன ; பிந்தியவற்றைக்குறித்து இருப்பது மரிது,
இல்லவுமில்லைதான். என்ன கொள்கை அல்லது உத்
தேசத்தின்பேரில் சோதிடம் ஏற்பட்டதோ அதுமே
லே சொல்லியிருப்பதைப்பார்க்கினும் பின்னும் பொய்
யானதும் வியர்த்தமானதுமாயிருக்கிறது ; ஏனெனில்,
மொத்தமாயல்லாமலும் தனித்தனியாயும் மானிடர்க
ளின் பொருள் சம்பந்தமும் புத்தி சம்பந்தமுமானபலா
பலன்களின்பேரில் வானவுருக்கள் அதிகாரஞ்செலுத்
துவதுமன்றி, அவற்றை நிச்சயிக்கவும் நிச்சயிக்கின்ற
னவென்று சொல்லப்படுகிறது. ஒருவனுடைய ஜாத
கமானது அவனுடைய ஜனனகாலத்தில் சில வானவு
ருக்களிருந்த நிலையைக்குறிக்கிறது. சோதிடமானது
இதை ஆதாரவாகக்கொண்டு, அந்த மனிதனைக்குறித்த
அநேக காரியங்களை நிச்சயிக்கிறது ; அவையாவன:—
அந்த நபர் ஆணுபெண்ணு, சவுக்கியமாயிருப்பனு இரா
னு, அவனுடைய சாயலென்ன, வயசெவ்வளவு, செல
வந்தனுயிருப்பனு தரித்திரனுயிருப்பனு, ஆண்பிள்ளைக
ளெத்தனை பெண்குழந்தைகளெத்தனை பிறக்கும், புத்
திசாலியாயிருப்பனு மந்தனுயிருப்பனு, மூர்க்கனு சாந்
தசீலனு, அவனுடைய மனைவி நல்லவளாயிருப்பளா
கெட்டவளாயிருப்பளா, தாரமெத்தனை, அவனுடைய
காலத்தில் நெருக்கமான பந்து யாரார் இறந்துபோவா
ர்கள், வியாபகஸ்தனுயிருப்பனு அடக்கமாயிருப்பனு,
செல்வம் பூமி ஆடுமாடு வேலைக்காரருண்டா, தருமகு
ணமுண்டாயிருக்குமா, நல்லமனசா, ராஜப்பிரீதிகிடை
க்குமா, தெய்வபக்தியிருக்குமா, யாத்திரைபோவனு,
எந்த பந்துக்களின்பேரில் துவேஷமுண்டாகும் என்று
அந்த மனிதனுடைய மனது சம்பந்தமாயும் சரீர சம்ப
ந்தமாயும் ஸ்திதி சம்பந்தமாயும் இப்படிப்பட்ட அநே
கவிவரங்கள் கேட்பதே. ஜாதகத்தினல் தெரியவருகி
றபடி கிரகங்களின் நிலையைக்கொண்டு அப்படிப்பட்ட
விவரங்களை நிச்சயித்து முந்திச்சொல்லுவதாக சோ
திடன் நடிக்கிறுன். அப்படி நடிப்பது சுத்த பொய்
யென்று சொல்ல நான் பின்வாங்கமாட்டேன்.

(இன்னும்வரும்.)

கடிதம்.

ஓ, தத்துவவிவேசினியென்னுங்கண்ணே !

நின்னேடு வார்த்தையாடி நெடுநாளாயினும் மனவருத்தமு
ருமல் யாங்கொடுத்தனுப்பு மிப்பொருளை மறதியாலெங்கும்
வையாமலுன்னுடையி ஞேர் கோணத்திலாவலுடன் முடிந்து
வைப்பாயென நம்புகின்றனம். அது இது:—

ஓ, ஸ்ரீலோகரஞ்சனியென்னும் வஞ்சியே !

1888 ம். ஆண்டு, ஜநவரிமீ, 1 ம் வ, வெளிவந்த நின்னிர
ண்டாம்பக்கம், முதற்கலம் ஸ்ரீ லோகரஞ்சனிபரிபாலிக்கப்
படுதல் என்ற மகுடத்தின்கீழ் 9, 10 ம் வரிகளில் "நவீநபி
ரமசமாஜம், நவீநநாஸ்திகம், இவைகளைக் கலக்கியோட்டியும்
விளங்கும்" எனக் கூறினையே. நவீநமென்ற தொடக்கத்தாற்
றனே "பூர்வம்" என்பது அருத்தாபத்தியாகின்றமையால், பூர்
வமே பிரமசமாஜமும், நாஸ்திகமுமுண்டென்பது நின்னபிப்பி
ராயமென்பதற்கு நீயே சான்றுனயன்றே?

அங்ஙனமிருக்கத், தொன்றுதொட்டின்றளவுமுள்ள நாத்தி
கத்தைச் சென்றவாண்டனறு புறப்பட்ட, இரண்டுவயதுடைய
பெண்ணுகியநீயோட்டப்போகின்றது மாதாவுக்கு மகள் மருத்
துவம்பார்க்கப்புகுந்ததுபோலும். அழகழகு!

இதுகாறும் நாத்திகத்தையோட்டப் பிரயத்தனித்தோரெல்
லோரு மெவ்விதவாட்டமடைந்தனரென நீ கேட்டிலையோ!
நாத்திகத்தைக்கலக்கப்புகும் நீமேற்படி மதத்தின் தெளிவை
யுண்ணவறியாதவள்தானே. அல்லது கலக்கியபின் அருந்தவ
கையிலாவெறுபோன்றவளோ ? யாதின லோட்டுவையோ ?
நவீநநாத்திகமென்றென்றுளபோது நவீந ஆத்திகமென்றென்றி
ருக்கவேண்டுமே ; அதுதான் நின் உருவாகிய ஸ்ரீவிசிஷ்டாத்
வைதம்போலும். நின்கதியிவ்வாறிருக்க நினனங்கமாகிய
மூன்றும்பக்கம் முதற்கலமீற்றுக்கு அயலுக்கயல் வரியில் ஆதி
பிரமசமாஜமாகிய ஸ்ரீ விசிஷ்டாத்வைதமென்றடக்கியிருக்கி
ன்றையே, அதனல் நவீநமாகிய நீ பூர்வமுமாகவிருப்பையோ!
(ஆ, ஆ! பன்னுண்முத லிந்நாள்பரியந்தங்கண்டுங் கேட்டுமறி
யாவோர் நூதநப்பொருளுதயமாயிருக்கின்றது பார்மின்கள்,
பார்மின்கள். அஃதியாதெனின் ஏககாலத்திலே பூர்வமாகவும்
நவீநமாகவுமுள்ள வோர்பொருள்தான். என்றுங் காணுப்
பொருளிது கவநம், கவநம்.) இதனல் ஸ்ரீவிசிஷ்டாத்வைதம்
ஆதிபிரமசமாஜமென்றும் பிரமக்கியானபோதினி நவீந பிரம

சமாஜமென்றும் நீயே சம்மதிக்கின்றனை. நீயே சம்மதித்தளாத்த விருசொற்றொடர்களின் அடைகளாகிய "ஆதி" "நவீநம்" என்றவைகளை நீக்கிப் பார்க்கின், இரண்டும் பிரமசமாஜமேயன்ரு? ஆனுல் ஒன்று முந்தினது மற்றொன்று பிந்தினதுந்தானே. **பூர்வ போற்காப்பு, நவீன போற்காப்பு** எனப்புகல்வதால், பூர்வ நவீனபேதமேயன்றி, பொற்காப்புகள் பேதமற்றிருத்தல்போல மேற்கூறிய பிரமசமாஜங்களும் அப்பேதந்தானே. நின்கூற்றால் விளைந்த பயன்ருனேயிது. ஐயோ, ரஞ்சனியே! நீ கருதியதொன்றும் முடிந்ததொன்றுமாயிற்று. பேதைகுணமே நின்சொரூபமாயிருந்தபோதினும், நின்னையறியாமலே யுதித்த அபேதத்திற்காகச் சந்தோஷமே. மேலும், ஓ பேதைப்பருவத்தாளே! நினக்குப் பூர்வம், நவீனமிரண்டும் அடைகளாக நிற்கும்போது, மேலே யாங்கூறிப்போந்தவண்ணம் நாத்திகத்துக்கு மேன் அவைகளடைகளாகா? ஐயோ, பாபம்! இக்காட்டு நியாயத்தைக்கொண்டுதானு நாத்திகத்தையோட்டப்போகிருய்? பளா, பளா!! நன்று, நன்று!!

பேதைப்பருவமுடைய மாதே!

ஆணின்றிப் பெண்ணும், நன்மையின்றித்தின்மையும், பகலின்றியிரவுமுண்டா? மேற்படிபெண், தின்மை, யிரவு, இவைகளின்றி ஆண், நன்மை, பகல் என்பன வுள்ளனவா? அதுபோல நாத்திகமின்றி யாத்திகமும், ஆத்திகமின்றி நாத்திகமுமுண்டா? நாத்திகமுள்ள இமைப்போது முதல் ஆத்திகமும், ஆத்திகமுள்ளவிமைப்போது முதல் நாத்திகமுமுள்ளதுதானே. அப்படியிருக்க நாத்திகத்தைநோக்கி நவீனமெனப்புகலவரின், ஆத்திகத்தைநோக்கி நவீநமெனப்பகர நியாயம்வேண்டுமோ! அன்றியும், ஆத்திகம் நாத்திகத்தைக்கண்டிக்க முயலின், நாத்திகம் ஆத்திகத்தைக் கண்டிக்கமுயலாதா? இம்மாத்திரையளவும் நாத்திகத்தால் ஆத்திகம் பட்டபாடு சாத்தியமல்லவென்பதைக்கற்பிக்க வாத்தியாரும் வேண்டுமோ! இந்நிமைப்பரியந்தம் நாத்திகரென்ரு லாத்திகருக்கு நேர்வாள மாத்திரைதானே. இது ரஹஸ்யமல்லவே. என்றேனும் ஆத்திகம் நாத்திகத்தையீஷத்தேனுமசைத்ததுண்டா? அசைத்ததற்குச் சான்றுளதா! அது நாத்திகர்முன் நிற்குமா? நின்பாடிம்மட்டிருக்க, இடையிலெழுந்த நீ, தொடைதட்டிக்கொண்டு, படையெடுக்க முயல்வதன்ரு தடையிலா யிடைவிடா நகைப்புக்கிடனுகின்றது.

"எண்ணறக்கற்றெழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி" என்ற வசனத்தை யாமறிந்திலேயென்று, பேதைமையேயணிகலமாகப்பூண்டு, நாணத்தை நடுத்தெருவிற்கிந்து, மானமின்றி பேசத்தொடங்கினை. இளங்கன்றுபயமறியாத்தன்மைநிகர் சிறுபெண்ணுகிய நீ பதட்டமாய்ப் பேசினை. இனியேனும் நின்நாமத்திற்கியைந்த நடையுடைபாவனை முதலிய சீலங்களாகிய சுகுணபரணந்தொடுத்து, மானமோம்பலெனு மாடையை யுடுத்து, நல்லோர்க்குனைக்கொடுத்து, அன்னோர்பாலடுத்து நயவசனம்விடுத்துக், குணபாசசமுதாயத்தைக்கெடுத்துக், கரங்களைச் சிரமேலெடுத்து, மனசலனத்தைத் தடுத்துப், புண்ணியர்பாதம்படுத்துக் கெஞ்சிக்கேட்டு நெஞ்சிற்பூட்டி ரஞ்சினியென நிற்கக்கடவாய். இப்பத்தியங்களை மறந்து நானே சிறந்தவளென்று துறந்தவள்போற் பேசப்புகுவையாயின், யாம் திறந்துவிடநேரும். ஆருமற்றவூரிலஸ்வமேதயாகஞ் செய்யத்துணிந்த வீரனைப்போலாயினை. பதருத காரியஞ் சிதராதாகையால் நின் பாலிய பதட்டத்தைச் சற்றேநிறுத்தி, யாங் கூறியதைப் புத்தியிற்பொருத்தி, நின்னுட்டத்தையடக்கி, ஓட்டத்தையொடுக்கி, நாத்திகமெனற்கு நாவெழாது மூலையில் முடங்குவாயாக.

கிருஷ்ணகிரி, உண்மைவிரும்பி.

இந்து பிரீச்சிங் சொசைட்டிக்குச் சில மொழி கூறல்.

ஓ, ஓ, சொசைட்டியே!

நீ, சைவ, வைணவ, மாத்துவமென்னுமதங்கள் வெவ்வேருயிருந்தபோதினும் அத்தனையு மிந்துமதமேயெனச் சம்மதித்து, இம்மதத்தினின்று மநேகர்கிறிஸ்துமதத்தை யனுசரிப்பதாலன்னோருடைய தாய்தந்தையர், உடன்பிறப்பு, சுற்றத்தார்முதலியோர் படுந்துயர் சகியாது, அவர்களாற்ருத் துயரங்களையெல்லாங் காற்றுய்ப் பறக்கடிக்கவும், கிரிஸ்துமதத்தைச் சிதறவடிக்கவும், இந்துமதத்தைக் காக்கவும் எல்லோருமதனைப்பார்க்கவும், சுயமதப்பிரசங்கஞ்செய்யவும் பர மதப் பிரசங்கம் நையவும், தேசமெங்குமிந்துமதமோங்கவும், ஊணமதமேங்கவும், இந்துமதம் என்றும் வாசமாகவும் கிறிஸ்துமதமென்றும் நாசமாகவும், கங்கணங்கட்டியிருக்க, ஷை விவிலிய மதத்தைக் கண்டித்துவரும் பிரமசமாஜத்தாரையும் நாத்திகரையும் இந்துக்களல்லாரென்று கருதிப் பகைவர்போல் பேசினையா, என்ன! முற்கூறிய சைவாதிமூவருமே இந்துமதப்பிரிவோர்களென்ருல் பிற்கூறிய விருசாராரு மெம்மதப்பிரிவோர்? இவர் மதங்களெத்தேசத்திலுற்பத்தியாயின?

ரஞ்சனியே! நீ நவீநகண்டனி, அவர்கள் புராதந ... ஆகையாலத்தகைய நெடுநாளநுபவிகளையு மாதரவாகக் ... டு பங்காளித்வமின்றித் தொடுத்த காரியத்தில் முயலுவை ல், இடுக்கணின்றி நன்முடிவடைவை. அஃதின்றி ஊழிபகைக்கின் வேருடன்கெடுமென்பதுபோல், மதங்களையெல்மதஞ்செய்யும் நாத்திகத்தைப்பகைத்து நீ யிருப்பதெங்ஙாபிரசங்கிப்பதெவண்? ஆய்ந்தோய்ந்துபாராதான் சாக ... ன் என்ற வசனத்தைக் கவனித்துப்பார். நாத்திகத்தைப் ப... ப்பையானுலிதுவே நினக்கு வேர்ப்புழுவாய்நின்று நின்வாத்தை நாசமாக்குமென்பதிற்சந்தேகமில்லை. அதனுல் கிறிவர்களுக்கு நீ யேளனமாவை. ஆயின் நின்ஜெபமோங்காது.

நினக்கு யாம் அன்பாய்க்கூறு மொழிகளைக் கைப்பற்றி நடப்பையேல் நீ கொண்டகருத்து கொண்டாட்டத்துடன் நிறைவேறும்; இன்றேல், திண்டாட்டத்துடன்தானிருக்கும். இதைச்சகோதரவாஞ்சையாலுரைத்தனம், உண்மை. அன்றியும் நீ, பிரசங்கஞ் செய்ய வாரம்பித்த பின்னர், இந்துக்களிலொருவரேனுங் கிறிஸ்துமதஞ் செல்லாவண்ணஞ் செய்விக்கவேண்டும், இன்றேல், நின்மானத்தைப்போக்க வேறொன்றுந் தேவையில்லை. இந்து ஒருவன் கிரிஸ்தவனுவதே சாலும்.

எம்மொழிகட்கிசைந்துவருவையானுல், நின் நன்கொடையான பரோபகாரப்பிரசங்கமுயற்சி அருகுபோல் வேரூன்றி, அரசுபோற்றளிர்த்து, ஆல்போறபரவிப் பால்போற்பொங்கி யூணமதத்தை நாணச்செய்து நீடூழிவாழ்வை.

கிருஷ்ணகிரி, உண்மைவிரும்பி.

சில்லரை.

ஒரு பாதிரியானவர் நெடுங்காலமாய் வாமல் தாமசமாயிருக்கிற ஏசுக்கிரிஸ்து கடைசியாய் அகத்தியம் வரப்போகிருரென்று பாரெஸ்டர் ஹாலில் சாட்சிபகர்ந்தனர். நாஸ்திகமும் பொது நலமும் நமது தெருக்களிலே பயிரங்கமாய்க் கற்பிக்கப்பட்டு, அஞ்ஞானிகளாகிய லவுகிகிகளால் கிரிஸ்துமதம் தாக்கப்படுவதினுலே, கிரிஸ்து வருகிறநாள் சமீபித்திருக்கிறதென்று அந்தப் பாதிரியாருக்குத் தெரியும், உலகமானது நோவாவென்பவனுடைய காலத்திலிருந்ததுபோல இப்போது அவ்வளவு அநீதமுள்ளதாயிருக்கிறதென்றும், கடவுள் கதவை மூடிப்போடவேண்டிய தருணம் சமீபித்திருக்கிறதென்றும் அவர் நமக்கு எச்சரிக்கை செய்கிருர். ஏசுவானவர் கடந்துவரவேண்டியமார்க்கம் வெகு தொலைவாயிருப்பதால், அவர் முன்னதாகவே புறப்பட்டிருக்கவேண்டும். அவர் திரும்பி வருவதாக அவருடைய சீஷர்களாகிய அப்போஸ்தலர்கள்காலத்திலேயே வாக்குறுதி சொல்லியிருக்கிருர். ஒருவேளை அவர் வழிதப்பிப்போயிருப்பர். அந்தப் பாதிரியாருக்கு முந்தியிருந்த அநேகர் ஏமாந்துபோனதுபோலவே ஏமாந்து போகும்படியான விதிப்பு அவருக்குமுண்டு.

காம்பர்வெல் நியூரோட்டு வழியாய் சால்வேஷன் ஆர்மிகோலம் போய்க்கொண்டிருக்கையில் அவர்களுக்குள் சில வண்டிகள் நுழையவே, ஏழுபேர் தாக்குண்டு கீழேவிழுந்துவிட்டார்கள், ஒரு சிறு பெண்ணை ஆசுபத்திரிக்குக்கொண்டுபோகும்படி நேரிட்டது. கடவுள் தன் சொந்தமக்களை ஏன் பாதுகாக்கவில்லை. கோலஞ் சென்றவர்களும் வண்டியோட்டிகளும் "ஸ்பிரிட்டின்" வசப்பட்டவர்களாயிருந்ததாக எண்ணப்படுகிருர்கள், (ஸ்பிரிட்டென்பது இங்கிலீஷில் ஆவிக்கும் சாராயத்திற்கும் பெயர்.)—ஆனுல் இரண்டுவகை ஸ்பிரிட்டில் மனிதர்களுக்கு மிகவும் கெடுதியானது இன்னதென்று இன்னும் தீர்மானமாகாமலிருக்கிறது.

கடவுளானவர் புசலை மாதிரியாக மெக்சிகோவுக்கு அனுப்பினுர், அது குவிலேட் என்னும் பட்டணத்தைப் பாழாக்கிவிட்டது. அநேகர் மாண்டார்கள். கிச்சிலியும்காப்பிப் பயிரும் அழிந்துபோயின. உண்மையாகவே அவருடைய உருக்கமான கிருபை அவருடைய சகல வேலைகளின்பேரிலுமிருக்கின்றன.

லாரெல்ஹில் பிரதேசத்து மெதாடிஸ்டு பாதிரியாகிய ரிவரெண்டு ஏட்வார்டுதிரிவரானவர் ஒருநாள் இருந்தாற்போலிருந்து அவ்விடத்தைவிட்டுப்போய்விட்டார். அவர்பேரில் கலகமான நடத்தைக்காகப் பிராது செய்யப்பட்டிருக்கிறது; பிராதுசெய்தவன்முன்னே சால்வேஷன் ஆர்மியைச் சேர்ந்திருந்த ஒரு சிறுவன்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.